புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **02 அக்டோபர், 2024**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு உள்ளாட்சித்துறை சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் 10 ஆண்டுகள் நிறைவு விழா, தூய்மையே சேவை தின விழா (ஸ்வச்சதா ஹி சேவா) மற்றும் தூய்மை இந்தியா தின விழா (ஸ்வச் பாரத் திவஸ்) ஆகியவை கம்பன் கலையரத்தில் இன்று (02-10-2024) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு பாரதப் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட “அம்மாக்கு ஒரு மரம்” திட்டத்ததை அறிமுகப்படுத்தி அதற்கான உறுதிமொழியை துணைநிலை ஆளுநர் வாசிக்க அரங்கில் உள்ள அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். முன்னதாக, மாண்புமிகு முதலமைச்சருடன் இணைந்து பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்குபெற்ற சைக்கிள் பேரணி மற்றும் குழு ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து தூய்மை பாரதம் 2024 கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. R. செல்வம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க. லட்சுமிநாராயணன், மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான், அரசுத்துறைச் செயலர்கள் திரு ஜவஹர், திரு கேசவன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.